**22.03.2022**

**அ.வ.எண்.<u>194/2015</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>** வா.சா.2

இவ்வழக்கினை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் ராஜா என்பவர் தாக்கல் செய்துள்ளார். யாருக்கு எதிராக அவர் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் ராதா என்பவர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். நான் இவ்வழக்கில் தரப்பினரா என்றால் இல்லை. எந்த சர்வே எண்ணிற்கு உட்பட்ட சொத்தின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பபட்டதா என்றால் இல்லை. ராஜா அழைத்ததன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வழக்கறிஞருக்கு யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன். எனக்கு வழக்கறிஞர் உள்ளரா என்றால் இல்லை ராஜாவின் வழக்கறிஞர் கூறியதன் பேரில் சாட்சியம் அளிக்கின்றேன். ராஜாவின் வழக்கறிஞர் அலுவலகத்தில் தான் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல தனிநபர் தட்டச்சர் மூலமாக நான் தயார் செய்தேன். என்னை தனிநபர் தட்டச்சரிடம் என்னை யார் அழைத்து சென்றது என்றால் நான் தனியாக

சென்றேன். யாரை வைத்து நீதிமன்றத்தில் எனது பிரமாண வாக்குமூலத்தினை நான் தாக்கல் செய்தேன் என்றால் ராஜா அவரது வழக்கறிஞரை வைத்து தான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ராதா எனது சகோதரார் என்றால் சரிதான். அவருடன் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எனக்கும் எனது சகோதரர் ராதாவிற்கும் ஏன் பேச்சு வார்த்தை இல்லாமல் போய்விட்டது என்றால் எங்களது குடும்ப நபர்களிடையே அவரது குழந்தைகளை நான் கண்டிப்பதால் என்னிடம் கண்டிக்ககூடாது என்று கூறி அதன் காரணமாக குடும்ப பிரச்னை ஏற்பட்டு எங்களிடையே பேச்சு வார்த்தை கிடையாது. நான் தாவா சொத்தின் மீது எந்த விதமான உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ராஜாவிற்கு சொந்தமான சொத்து நான் தற்போது அங்கு தான் குடியிருக்கின்றேன் என்னை ராஜா போகவேண்டும் என்று சொன்னால் சென்றுவிடுவேன். வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை சாட்சியம் ஒத்திவைக்கபடுகிறது.